பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

**02 03 2026 Monday** **12 40 PM**

நண்பகல்

ஆகாஷவாணி

**(Tune)**

செய்திகள் - வாசிப்பவர் - லட்சுமி ராகவன்

தலைப்புச் செய்திகள்

1. மேற்காசிய நாடுகளில் ஈரானின் தாக்குதல் அதிகரித்துள்ள நிலையில் அங்குள்ள இந்தியர்களின் பாதுகாப்பு உறுதி செய்யப்படும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையில் நடைபெற்ற பாதுகாப்பு அமைச்சரவை கூட்டத்தில் முடிவு எடுக்கப்பட்டுள்ளது.
2. இந்தியா வந்துள்ள கனடா பிரதமர் **Mark Carney** இன்று புதுதில்லியில் பிரதமருடன் உயர்மட்ட பேச்சு நடத்தவுள்ளார்.
3. ஈரான் போர் காரணமாக அனைத்து மாநிலங்களும் மிகுந்த எச்சரிப்புடன் இருக்குமாறு உள்துறை அமைச்சகம் அவசர கடிதம் அனுப்பியுள்ளது.
4. பாகிஸ்தானின் ராணுவ கட்டமைப்புகளை குறிவைத்து அழித்ததாக ஆப்கானிஸ்தான் தெரிவித்துள்ளது.
5. நாகப்பட்டினத்தில் இருந்து இலங்கை காங்கேசன்துறைக்கு வரும் வெள்ளிக்கிழமை முதல் மீண்டும் கப்பல் போக்குவரத்து தொடங்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

... இனி விரிவான செய்திகள்...

>>>>>>>><<<<<<<<<

மேற்கு ஆசிய நாடுகளில் உள்ள இந்தியர்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று பிரதமர் திரு. நேரந்திர மோடி தலைமையில் நடைபெற்ற பாதுகாப்புக்கான மத்திய அமைச்சரவை கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளது.

இந்தியாவில் இருந்து அங்கு சென்றுள்ள பயணிகள் மற்றும் தேர்வு எழுதவுள்ள மாணவர்களை பாதுகாப்பது குறித்தும் விரிவாக அமைச்சரவை கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது.

மேற்கு ஆசிய நாடுகளின் எல்லைப்பகுதிகளில் பாதுகாப்பு மற்றும் பொருளாதார மற்றும் வர்த்தக நடவடிக்கைகளை பாதுகாப்பாக மேற்கொள்வது குறித்தும் பாதுகாப்புக்கான மத்திய அமைச்சரவை கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளது.

>>>>>>>><<<<<<<<<

கனடா பிரதமர் **Mark Carney,** பிரதமர் திரு. நரேந்திர மோடியுடன் தமது தூதுக்குழுவினரருடன் இன்று பிற்பகல் உயர்மட்ட பேச்சு நடத்தவுள்ளார்.

இருதரப்பு தூதரக உறவுகளை மேம்படுத்துவது குறித்தும் கஇரு தலைவர்களும் ஆலோசிக்க உளளர். வர்த்தகம் முத லீடு எரிசக்தி முக்கிய கனிம வளங்கள், வேளாண்மை, கல்வி, அறிவியல் ஆராய்ச்சி, புதய கண்டுபிடிப்புகள் மற்றுமு இரு நாட்டு மக்களுக்கு இடையிலான தொடர்புகள் குறித்து விவாதிக்க உள்ளனர்.

மண்டல மற்றும் உலகளவில் தற்போதுள்ள அரசியல் மற்றும் பொருளாதார சூழ்நிலைகள் குறித்தும் பிரதமர் மோடி கனடா பிரதமரிடம் பேசவுள்ளார்.

இந்த பேச்சுகளுக்கு பின் இந்தியா-கனடா தலைமை செயல் அதிகாரிகள் இடையிலான கூட்டத்தையும் பிரதமர் திரு. நரேந்திர மோடி மற்றும் கனடா பிரதமர் **Mark Carney**-யும் பார்வையிட உள்ளனர்.

முன்னதாக இன்று காலை கனடா பிரதமர் திரு. **Mark Carney**-யை வெளியுறவுத்தறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் சந்தித்து பேசினார்.

இந்த சந்திப்புக்கு பின் அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், இந்த சந்திப்பின் போது இரு தரப்பு ஒத்துழைப்புக்கான வாய்ப்புகைள முனனெடுத்து செல்வதில் கனடா பிரதமர் மேற்கொண்டு வரும் முயற்சிகளை இந்தியா வரவேற்பதாக தாம் தெரிவித்ததாக குறிப்பிட்டுள்ளார்.

இருநாடுகளுக்கும் இடையிலான தூதரக உறவுகள் குறித்தும் விவாதிக்கப்பட்டதாக கூறியுள்ளார்.

>>>>>>>><<<<<<<<<<

ஈரான் மீது இஸ்ரேலும் அமெரிக்காவும் இணைந்து தாக்குதல் நடத்துவதன் காரணமாக இந்தியாவில் வன்முறை சம்பவங்கள் நிகழாவண்ணம் மிகுந்த எச்சரிக்கையுடன் இருக்குமாறு அனைத்து மாநிலங்களையும் மத்திய அரசு கேட்டுக்கொண்டுள்ளது.

இதுதொடர்பாக உள்துறை அமைச்சகம் அனைத்து மாநிலங்கள் மற்றம் யூனியன் பிரதேசங்களுக்கு எழுதியுள்ள கடிதத்தில், ஈரான் நாட்டிற்கு ஆதரவான பேச்சாளர்கள் குறித்தும், வன்முறையை தூண்டும் வகையில் நடந்து கொள்பவர்கள் மீதும் மிகுந்த எச்சரிக்கையுடன் செயல்படுமாறு அறிவுறுத்தியுள்ளது.

மாநிலங்களில் உள்ள புலனாய்வு கட்டமைப்புகள் முடுக்கி விடப்பட வேண்டும் என்றும் இது தொடர்பான அக்னைத்து தகவல்கைளயும் மத்திய உள்துறை அமைச்சகத்திடம் தெரிவிக்க வேண்டும் என்றும் அந்தக் கடிதத்தில் கூறப்பட்டுள்ளது.

>>>>>>><<<<<<<<<<

மேற்கு ஆசிய நாடுகளில் நிலவும் தற்போதைய சூழ்நிலையை கருத்தில் கொண்டு ஏர் இந்தியா நிறுவனம் அந்த பகுதியில் உள்ள நாடுகளுக்கு செல்லும் விமான சேவையை இன்றும் ரத்து செய்துள்ளது.

இது தொடர்பாக ஏர் இந்தியா நிறுவனம் இன்று வெளியிட்டுள்ள பயணிகளுக்கான அறிவிப்பில், ஐக்கிய அரபு எமிரேட்ஸ், சவுதி அரேபியா, இஸ்ரேல் மற்றும் கத்தார் நாடுகளுக்கான விமான சேவை இன்றும் ரத்து செய்யப்படுவதாக கூறியுள்ளது.

ஏர் இந்தியாவின் வட அமெரிக்கா ஐரோப்பிய நாடுகள் உள்பட இதர இடங்களுக்கு செல்லும் ஏர் இந்தியா விமானங்கள் இன்று வழக்கம் போல இயக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்காசிய நாடுகள் உள்ள பகுதியில் வான்வெளி மூடப்பட்டு இருப்பதால் மாற்று வான்வெளி பாதையில் விமானங்களை இயக்கவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் கூறியுள்ளது.

மேற்காசிய நாடுகளில் நிலவும் சூழ்நிலையை தொடர்ந்து கவனித்து வருவதாகவும், மேற்காசிய வான்வழித்தடம் திறக்கப்பட்டவுடன் அப்பகுதியில் விமானசேவை மீண்டும் தொடங்கும் என்று தெரிவித்துள்ளது.

இருப்பினும் பயணிகளின் பாதுகாப்பை உறுதி செய்த பின்னரே இதற்கான அனுமதி வழங்கப்படும் என்றும் கூறப்பட்டுள்ளது.

ஏர் இந்தியா விமான டிக்கெட்டுகளை பதிவு செய்துள்ள பயணிகளுக்கு அவ்வப்போது தகவல் தரப்பட்டு வருவதாகவும் அந்நிறுவம் தெரிவித்துள்ளது.

>>>>>>>><<<<<<<<<<

ஈரானுக்கும் அமெரிக்க- இஸ்ரேல் கூட்டு படையினருக்கும் இடையே ஏவுகணை மற்றும் டிரோன் தாக்குதல்கள் தீவிரமடைந்து வருகின்றன.

ஈரான் மற்றும் ஈரான் ஆதரவு அமைப்பினர் இஸ்ரேல் மற்றும் வளைகுடா நாடுகள் மீது ஏவுகணை தாக்குதல்கள் மேற்கொண்டனர். இஸ்ரேல் மற்றும் அமெரிக்க படைகள் ஈரான் மீது தாக்குதல் நடத்தியுள்ளது.

இந்நிலையில் ஈரான் மற்றும் வளைகுடா நாடுகளுக்கு எதிரான போரை மேற்கொண்டுள்ள அமெரிக்காவுக்கு பிரிட்டன், பிரான்ஸ், ஜெர்மன் ஆகிய நாடுகள் உதவுவதாக அறிவித்துள்ளன.

ஈரான் நடத்தும் தாக்குதல்களுக்கு பதிலடி கொடுக்கவும் தாங்கள் தயார் நிலையில் இருப்பதாகவும் அந்நாடுகள் கூறியுள்ளன.

பதற்றமான சூழ்நிலை நிலவி வரும் நிலையில் அமெரிக்காவுடன் எந்தவித சமரச பேச்சுவார்த்தையும் மேற்கொள்ளப்படாது என்று ஈரான் பாதுகாப்புத்துறை அதிகாரி அலி லாரி ஜானி தெரிவித்துள்ளார்.

ஈரான் நாட்டின் தலைவர் அயதுல்லா அலி கமேனி, அமெரிக்க படையினரால் கொல்லப்பட்டதற்கு திரு. **Abbas Araghehi** கண்டனம் தெரிவித்தார்.

இந்த தாக்குதல் வன்முறையை தூண்டுவதற்கான நடவடிக்கை என்றும் சட்ட விரோதமானது என்றும் அவர் கூறினார்.

பாதுகாப்பு நடவடிக்கையாக ஈரான் பதில் தாக்குதல் நடத்தி வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

>>>>>>><<<<<<<<<<

பாகிஸ்தான் ராணுவ கட்டமைப்புகளை குறிவைத்து துல்லிய தாக்குதல் நடத்தப்பட்டதாக ஆப்கானிஸ்தான் பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக ஆப்கானிஸ்தான் பாதுகாப்பு அமைச்சகம் வெளியிட்டுள்ள சமூக வலைதளப்பதிவில், **Nur khan** விமானப்படை தளம், ராவல்பிண்டி **12**-வது பிரிவின் தலைமையகமான குவெட்டா

மற்றும் கைபரில் உள்ள பதுன்காவா ராணுவ கட்டமைப்புகள் தாக்குதல் நடத்தப்பட்டதாக கூறியுள்ளது.

இந்த ராணுவ நடவடிக்கையின் போது மேலும் பல பாகிஸ்தான் ராணுவ தளங்கள் குறி வைக்கப்பட்டதாகவும் தெரிவித்துள்ளது.

தற்போது கிடைக்கப்பெற்றுள்ள முதல்கட்ட தகவலின் அடிப்படையில் பாகிஸ்தானில் ராணுவ நிலைகள் அழிக்கப்பட்டது உறுதி செய்யப்பட்டுள்ளதாகவும் ஆப்கானிஸ்தான் கூறியுள்ளது.

பாகிஸ்தான் ராணுவம் ஆப்கானிஸ்தானில் காபூல் மற்றும் **Bagram** நகரங்களில் ஏற்கனவே நடத்திய தாக்குதலுக்கு பதிலடியாக இந்த தாக்குதல் நடத்தப்பட்டதாக ஆப்கன் பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

ஆப்கானிஸ்தான்- பாகிஸ்தான் எல்லைப்பகுதியில் ராணுவத்தினருக்கிடையே அவ்வப்போது எல்லை தாண்டிய தாக்குதல் நடைபெற்று வரும் நிலையில் ஒரு வாரத்திற்கு முன் ஆப்கானிஸ்தானுடன் போர் நடைபெறும் என்று பாகிஸ்தான் வெளிப்படையாகவே அறிவித்திருந்தது.

>>>>>>>><<<<<<<<<<

நாகப்பட்டினம் இருந்து இலங்கை காங்கேசன் துறைக்கு கப்பல் போக்குவரத்து வரும் வெள்ளிக்கிழமை முதல் மீண்டும் துவங்குவதாக சுபம் கப்பல் நிறுவனத்தின் இயக்குனர் திரு. சுந்தர்ராஜன் தெரிவித்துள்ளார்.

காலநிலை மாற்றம் மற்றும் புயல் காரணமாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த இந்த கப்பல் போக்குவரத்தை மீண்டும் துவங்க

முடிவு செய்யப்பட்டுள்ளதாக அவர் எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

>>>>>>>><<<<<<<<<<

விழுப்புரம் மாவட்டத்தில் பிரதமரின் அனைவருக்கும் வீடு கட்டும் திட்டம் மற்றும் பிரதமரின் பழங்குடியினருக்கான வீடுகள் கட்டித்தரும் திட்டத்தின் கீழும் அதிகளவில் மக்கள் பயன்பெற்று வருகின்றனர்.

இதற்கான நிதி ஒதுக்கப்பட்டு **700**-க்கும் மேற்பட்ட வீடுகள் பயனாளிகளிடம் ஒப்படைக்கப்பட்டு உள்ளதாகவும் எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**(Voice byte - 50 Sec)**

>>>>>>>><<<<<<<<<<

தமிழகத்தில் பிளஸ் டூ பொதுத்தேர்வு தொடங்கியது.

அனைத்து தேர்வு மையங்களிலும் இன்று காலை **10** மணி முதல் தேர்வுகள் நடைபெற்று வருகின்றன. அரசு, அரசு உதவி பெறும் பள்ளிகள மற்றும் தனியார் பள்ளிகளை சேர்ந்த மாணவர்களும், தனி தேர்வர்களும் தேர்வு எழுதுகின்றனர்.

மாற்றுத்திறன் மாணவர்களுக்கு தேர்வு எழுதுவதற்கான வசதிகளும் செய்து தரப்பட்டுள்ளன.

பார்வை குறைபாடு உள்ள மாணவர்களுக்கு தேர்வுகளை எழுதித்தர ஸ்கிரைபர்கள் அனுமதிக்கப்பட்டுள்ளனர். தேர்வுகள் நேர்மையாக நடைபெறுவதை உறுதி செய்ய பறக்கும் படையினரும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

>>>>>>>**End**<<<<<<<<<<<